செ. கு. எண்:150 நாள்: 11.10.2017

# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்களின் இரங்கல் செய்தி – 11.10.2017

தினமலர் நாளிதழின் பங்குதாரரும், திருச்சி மற்றும் வேலூர் தினமலர் பதிப்புகளின் ஆசிரியரும், வெளியீட்டாளருமான திரு. ஆர். ராகவன் அவர்கள் நேற்று (10.10.2017) உடல்நலக் குறைவால் காலமானார் என்ற செய்தி அறிந்து மிகுந்த துயரம் அடைந்தேன்.

தினமலர் நாளிதழின் நிறுவனர் திரு.டி.வி. ராமசுப்பையர் அவர்களின் மகனான திரு.ஆர். ராகவன் அவர்கள், தமிழ்நாடு முழுவதும் நெடிய பயணங்கள் மேற்கொண்டு, அந்தந்த ஊர்களின் பொதுச் செய்திகள், உள்ளூர் வணிகச் செய்திகள் ஆகியவற்றை வெளியிடச் செய்து தினமலர் நாளிதழின் விற்பனையை அதிகரிக்கச் செய்தார்.

பத்திரிகை உலகில் தனக்கென தனி இடத்தைப் பெற்றவர் திரு. ராகவன் ஆவார். கடின உழைப்பாளியும், அனைவரிடமும் எளிமையாக பழகக்கூடிய பண்பாளருமான திரு. ஆர். ராகவன் அவர்களின் மறைவு பத்திரிகை துறைக்கு பேரிழப்பாகும்.

திரு. ஆர். ராகவன் அவர்களை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், பத்திரிகை துறை நண்பர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்வதுடன், அவரது ஆன்மா இறைவன் திருவடி நிழலில் இளைப்பாற எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கிறேன்.

**K. பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**